1983 பிப்ரவரி 12]

ஐந்து ஆண்டுக் காலத்திற்கு மேல் அவர்கள் அங்கே பணியாற்ற முடியாது. நிரந்தரமாகவும் இருக்க முடியாது. அப்படி இருப்பவர்களை மீண்டும் நாம் தமிழகத்திற்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டு வருகிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் இருந்து டெபுடேஷன் அடிப்படையில் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ள பொறியாளர்களின்—பொறியியல் வல்லுநர்களின்—எண்ணிக்கை என்ன? அவர்கள் பல ஆண்டுக் காலமாக வெளிநாடுகளில் நிரந்தரமாகத் தங்கி, அந்த வெளிநாடுகளுக்குப் பெருமை சேர்க்கும் திறமைபெற்ற நிபுணர்களை நமது நாட்டிற்கு அழைத்து வர அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: தலைவர் அவர்களே, தமிழகத்தில் கண்காணிப்புப் பொறியாளர்கள் (சூப்பிரண்டென்டெண்டிங் இன்ஜினீயர்) 57 பேர் இருக்கிறார்கள். அவர்களில் 1 நபர் மட்டும் வெளிநாடுகளில்—அயல் பணிக்கு—அனுப்பப்பட்டு இருக்கிறார். எக்சிகியூடிவ் இன்ஜினியர்கள் 315 பேரில் 7 பேர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பெற்று இருக்கிறார்கள். உதவி செயற்பொறியாளர்கள் (அசிஸ்டெண்ட் எக்சிகியூடிவ் இன்ஜினீயர்கள்) 1,318 பேரில் 29 பேர்கள் அயல் பணிக்குச் சென்றிருக்கின்றனர். உதவிப்பொறியாளர்கள் (அசிஸ்டெண்ட் இன்ஜினீயர்)3283 பேரில் 8 பேர்கள் அயல்பணிக்குச் சென்று இருக்கிறார்கள். மொத்தம் உள்ள 4973 பேர்களில் 45 பேர்தான் இப்போது அயல்நாட்டில் பணிசெய்கின்றனர் என்ற விவரம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அத்தகைய பொறியாளர்களை நம் நாட்டிலேயே பணியில் அமர்த்திக் கொள்ள இந்த அரசு அக்கறை காட்டுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

அனாதை விடுதிகள் பராமரிப்பிற்கான நிதி உதவி.

*வினா எண். 259—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனாதை விடுதிகள் பராமரிப்பிற்கு என்று வெளிநாடுகளிலிருந்து உதவிகளை சிலர் பெறுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) உதவிகள் பெறுவது யார், யார் என்பதை அரசு அறிவிக்குமா?

[1983 பிப்ரவரி 12

(இ) பெறும் உதவிகள் பற்றி அரசு தணிக்கை செய்கிறதா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) அனாதை விடுதிகள் பராமரிப்பிற்கு என்று வெளிநாடுகளில் இருந்து சில நிறுவனங்கள் உதவிகளைப் பெறுவது அரசுக்குத் தெரியும்.

(ஆ) உதவிகள் பெறும் நிறுவனங்கள் குறித்த விவர அறிக்கை அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

(இ) நிறுவனங்கள் பெறும் அந்நிய நிதி உதவிகள் குறித்த கணக்குகள் மாநில அரசால் தணிக்கை செய்யப்படுவதில்லை. ஆனால், அந்நிய நிதி உதவிகள் குறித்த கணக்குகள் பட்டயக் கணக்கரால் (Chartered Accountant) தணிக்கைச் செய்யப்பட்டு, அக்கணக்குகள் மத்திய அரசு உள்துறைச் செயலருக்கு அனுப்பப்படுகிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்தப் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள 24 நிறுவனங்கள் தவிர, இன்னும் பல்வேறு இடங்களில் இத்தகைய நிறுவனங்கள் இருக்கின்றன என்று அறிகிறேன். குறிப்பாக, ஓட்டப்பிடாரம், டி. கல்லுப் பட்டி போன்ற இடங்களில் இருக்கின்றன. டி. கல்லுப்பட்டியில் பாய்ஸ் டவுன் கூட இருக்கிறது. அப்படிப்பட்ட அமைப்புகள் எங்கெங்கு இருக்கின்றன என்பதும் அரசுக்குத் தெரியும். அப்படிப்பட்ட அமைப்புகளுக்கு தமிழ்நாடு அரசாங்கம் ஏதாவது உதவி செய்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, குறிப்பிட்ட அந்த அமைப்புகள் பற்றி இங்கே என்னிடத்தில் குறிப்புகள் இல்லை. அனாதை விடுதிகளை, தனியார் நடத்துவார்களினால் தமிழக அரசு அவற்றிற்கு மானியம் கொடுத்து வருகிறது. அதோடு மட்டுமல்ல, சில நிறுவனங்களுக்கு அந்நிய நாட்டு உதவியும் கிடைத்து வருகிறது. அந்த அந்நிய நாட்டு உதவி மாநில அரசின் வழியாக, மத்திய அரசின் அனுமதிபெற்றும் பெறுகிறார்கள். சில நேரங்களில் மத்திய அரசின் நேரடி அனுமதியைப் பெற்றும் பெறுகிறார்கள். இப்படி மாநில அரசு வழியாகவும், மத்திய அரசின் வழியாகவும் உதவி பெறும் நிறுவனங்களைத் தவிர, மத்திய அரசின் உள்துறை அமைச்சகம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடைபெற்று வரும் நிறுவனங்களும் உதவிகளைப் பெறுகின்றன. அந்த நிதி முறையாக பயன்படுத்தப்படுகிறதா என்பதைக் குறித்த அறிக்கையை மத்திய அரசுக்கு அவர்கள் நேரடியாக அனுப்பவேண்டும் என்று இங்கே குறிப்பு தரப்பட்டு இருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, வெளி நாடுகளில் இருந்து உதவி என்பது—காரணம் இல்லாமல் காரியம் இல்லை என்பது உண்மை.—அந்த அடிப்படையில் இந்த உதவி சில நேரங்களில் உளவு அமைப்புகள் என்று இயங்குகின்ற தன்மையிலும் கிடைக்கிறது. ஆகவே, இதையெல்லாம் கண்காணிக்கவும், அவற்றிற்கு வரக்கூடிய நிதியை முறையாகச் செலவு செய்யவும், அந்த ஸ்தாபனங்கள் உளவு ஸ்தாபனங்களாகப் பணியாற்றாமல், உண்மையிலேயே குழந்தைகளைப் பராமரிக்கும் நிறுவனமாகவே அது செயல்படுகிறதா என்பதைக் கண்காணிக்கவும் ஒரு குழு அமைத்து, அதைச் செய்வதற்கு மாநில அரசு தயாராக இருக்கிறதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, தனியார் நிறுவனம் நடத்தக்கூடிய அனாதை இல்லங்களுக்கு தமிழக அரசால் நிதி உதவி கொடுக்கப்பட்டால் அந்த நிதி உதவியை மட்டும்தான் தமிழக அரசு கண்காணிக்கும். மற்ற நிதி உதவிகளை மத்திய அரசு நேரடியாகக் கவனித்து வருகிறது.

திரு. மு. அப்பாதுரை : தலைவரவர்களே, இதுபோன்ற அனாதை விடுதிகளில் மாணவர்களை 8-வது வகுப்பு படிப்பு முடித்தவுடன் வெளியே அனுப்பிவிடுகிறார்கள். 8-வது வகுப்பு படிப்பை வைத்துக்கொண்டு அவர்கள் எந்தவிதமான வேலையும் பெற முடியாது; வேறு வசதிகளைப் பெறவும் வாய்ப்பு இல்லை. ஆகையால் அவர்கள் ஓரளவுக்கு வசதியைப் பெறும் வரையில், அல்லது பெறக்கூடிய அளவுக்கு வரும்வரையில் அங்கே தங்கிப் படிக்க ஏற்பாடுகளைச் செய்ய அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, அரசினால் நடத்தப்படக்கூடிய அனாதை விடுதிகளில் அவர்கள் படிக்கக்கூடிய வசதிகளை அரசு செய்துவருகிறது. தனியார் விடுதிகளில் அவரவர் விருப்பத்திற்கு ஏற்றவகையில்தான் செயல் படுத்துகிறார்கள்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : தலைவரவர்களே, அனாதை விடுதிகள் என்ற பெயரால் தமிழ்நாட்டில் சில மெஷனரிகள் கைவிடப்பட்ட பெண்கள் என்று சொல்லியும், அனாதைப் பெண்கள் என்று சொல்லியும் கொஞ்ச காலத்திற்கு அவர்களுக்கு உதவி செய்து, பின் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, விற்பனை செய்கிறார்களே, அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் பெண்களை ஏற்றுமதி செய்வதற்கும் சம்பந்தமில்லை. ஆகவே, தனிக்கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.